




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.09.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலாட திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண் : 662/2016 நாள்: 22.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில்,**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (22.09.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (22.09.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 19.09.2016 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 27.28 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 11.60 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 6.82 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 6.92 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 15.00 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 47.57 அடியும் உள்ளது.

19.09.2016 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 36.015 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 19.09.2016 முடிய 14,345 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 10,957 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 535 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 25,837 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 460 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 2,186 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 1048 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 3,694 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

பாசனக் கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்பினை கண்டறியும் பொருட்டு 13.08.2016 அன்று எல்கை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆக்கிரமிப்பாளர் விபரப்பட்டியல் மற்றும் வரைபடம் தோவாளை வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டதும், தமிழ்நாடு ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் 8/2007-ன்படி ஆக்கிரமிப்பு அகற்றப்படும் எனவும், பரசேரி கால்நடை உதவி மருத்துவர் விடுப்பில் சென்றுள்ளதால் வெள்ளிச்சந்தை கால்நடை உதவி மருத்துவர் கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறார். எனவே புதிய கால்நடை உதவி மருத்துவர் தலைமை அலுவலகத்திலிருந்து நியமனம் செய்யும்போது பதவி நிரப்பப்படும் எனவும், சுசீந்திரம் குளத்திலிருந்து தண்ணீர் வரும் கால்வாயினை சரிசெய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுளளது. நிதி கிடைக்கப்பெற்றதும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், இரணியல் பிரதானக் கால்வாயில் கிளைக்கால்வாய்களின் பகுதிகளில் ஆக்கிரமிப்பு அகற்ற அளவீடு செய்து தரும் பொருட்டு கல்குளம் வட்டாட்சியருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. அளவீடு செய்து தரப்பட்டவுடன் ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், 2015-ல் மழையினால் ஏற்பட்ட உடைப்புகள் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டன. நிரந்தர சீரமைப்புக்கான நிதி கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் சிமெண்ட் காங்கிரீட்டினால் பக்கச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், புல எண் 533/3-ல் உள்ள வெட்டிராமன்கோணத்து குளத்தின் ஆக்கிரமிப்பு அகற்ற அளவீடு செய்ய 16.08.2016 அன்று தேதி நிர்ணயம் செய்யப்பட்டது. நிர்வாக காரணங்களால் அளவீடு செய்ய இயலவில்லை. தற்போது 20.09.2016 அன்று மறு தேதி நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது. அளவீடு செய்து ஆக்கிரமிப்பு இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மாம்பழத்துறையாறு இடதுகரை கால்வாய் தூர்வாரும் பணிக்கு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு பெறப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும் எனவும், தெங்கம்புதூர் கால்வாயில் கடைவரம்பு பகுதி கிராஸ்பாருக்கு கீழ் உள்ள தண்ணீர் செல்லும் கால்வாயின் வலது கரையினை எல்கை நிர்ணயம் செய்ய வட்டாட்சியர் அகஸ்தீஸ்வரம் அவர்களுக்கு 01.09.2016-ல் கடிதம் எழுதப்பட்டுள்ளது. எல்கை நிர்ணயம் செய்த பின்னர் கால்வாய் கரையினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஊச்சிக்கால் ஓடையில் மண் இடிவு தடுக்கும் வகையில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு வெள்ள நிவாரண நிதி கோரி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெள்ள நிவாரண நிதி அல்லது வேறு சிறப்பு நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும் எனவும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஸ்கேன் மெஷின் அரசால் வழங்கப்படும் பட்சத்தில் குருந்தன்கோடு கால்நடை மருந்தகத்துக்கு ஸ்கேன் மெஷின் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பறக்கை குளத்தில் தண்ணீர் முழு கொள்ளளவில் இருப்பதால் தண்ணீர் அடைப்பு காலத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும்போது ஐந்து மடைகளும் சரி செய்யப்படும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, துணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சந்திரசேனன் நாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளம்) சுப்பிரமணியன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.